**பதுளை பிரதேச சபை - 2023**

--------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

பதுளை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க

கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் 154(6) கணகக்ாய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட 1.6.1(அ) (ஆ) என்ற பரிந்துரைகள் தவிர ஏனைய பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 244,601 நிலையான வைப்பு வட்டி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நீதிமன்ற தண்டப்பணம் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 12,201,014 ஆக இருந்த போதிலும் அது ரூபா 13,214,534 ஆக நிதி செயற்பாடுகள் கூற்றில் ரூபா 1,013,520 குறைத்து கொண்டுவரப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 18,543,691 ஆக இருந்த போதிலும் நிதிநிலைமைக் கூற்றில் ரூபா 19,044,803 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிக்கும், அத்திகதியில் உள்ளவாறு மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 120,090 வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது பதுளை மாநகர சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ஆயுர் வேத மருந்து இருப்பின் பெறுமதி ரூபா 436,150 இருப்புக் | எதிர்வரும் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கில் இருந்து செலவு வைக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டம் (LDSP) இன் கீழ் ரூபா 28,595,530 கிடைக்கப்பெற்றதுடன் அந்தப் பணம் பெறுவனவு மற்றும் அதில் செலவிடப்பட்ட செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | முன்னைய ஆண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மூலம் சுட்டிக்காட்ட தொங்கல் கணக்கின் மீதி ரூபா 996,755 மற்றும் மொத்த சொத்து பொறுப்புக்களின் மீதிக்கிடையிலான வேறுபாடு ரூபா 531,490 மீளாய்வாண்டின் போதும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானம் மற்றும் 47 செலவினக் கணக்கு மீதிகள் பொதுப் பேரேட்டின் மீதிக்கும் நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட மீதிக்கும் இடையே ரூபா 22,682,246 வேறு காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகள் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றவுடன் கணக்கீடு செய்து பேரேட்டின் மீதியை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகள், ஆயுர்வேத மருந்துகள். சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் மின்சார பழுதுபார்த்தல் பொருட்களின் கொள்வனவுக் கிரயம் பொதுப் பேரேட்டிற்கும் களஞ்சிய பேரேட்டிற்கும் இடையே ரூபா 2,346,348 வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பேரேட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 13,488,787 பெறுமதியுடனான 17 குறிப்புக்களுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகளை அடிப்படையாகக் கொண்டு கணக்குகளுக்கு கொண்டுவந்து அதன் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) திரண்ட நிதியத்திற்கும் செலவின கடன் கொடுத்தோடர் ஊழியர் கடன் பேரேட்டில் குறிப்பிடப் பட்டிருந்த ரூபா 1,096,855 பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| 23 மற்றும் 24(1) ஆம் பிரிவுகள் | சபைக்குரிய வீதிகள் நிலையான அடையாளம் மற்றும் எல்லைகள் அடையாளமிடப்பட்டு வீதிகள் மற்றும் சிறுவீதிகளின் பெயர் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | வீதி பதிவேட்டின் பிரகாரம் வர்த்தமானியல் பிரசுரிக்கப்பட்ட வீதிகளை பிரசுரிப்பதற்கு எதிர்வரும் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 104(4) | 02 வாகனங்களுக்கு உரியதாக இடம்பெற்ற விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கை மேற் கொண்டு முழுமையான பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னர் பூரண அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விபத்து ஏற்பட்டவுடன் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த வர்கள் தீர்மானிக்கப்படல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,167,874 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,885,488 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 4,663,704 | 6,166,294 | 4,016,791 | 2,149,503 | 950,184 | 818,290 | 854,746 | (36,456) |
| (ii) | வாடகை | 6,300,000 | 1,910,461 | 1,776,047 | 134,414 | 1,200,000 | 1,489,804 | 1,699,850 | (210,046) |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 910,000 | 716,500 | 716,500 | 0 | 585,000 | 585,000 | 500,000 | 85,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,550,000 | - | 585,834 | - | 3,021,520 | 2,664,989 | 2,123,061 | 541,928 |
| | மொத்தம் | 14,423,704 | 8,793,255 | 7,095,172 | 2,283,917 | 5,756,704 | 5,558,083 | 5,177,657 | 380,426 |

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஆதன வரி ரூபா 357,292 அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற | நிலுவை கழிவுப் பொருள் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | நிலுவைக் கழிவுப் பொருள் வரி ரூபா 489,250 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படுகின்றது. |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 11,950,907 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 7,093,896 பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த ஆண்டின் போது -மேற்படி- பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் 23(அ) இன் பிரகாரம் சபைக்குரிய கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் கழிவுப் பொருள் அகற்றுவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கழிவுப் பொருட்களை அகற்றும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற டெக்டெர் டேலர் இன் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | வாகனங்களின் உரித்து தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மெய்மையாய்வு சபை அறிக்கைகளின் மூலம் ஆகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்படாத எனினும் நீண்டகாலத்திலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத டெக்டெர் டேலர் ஒன்று பயனற்றுக் காணப்பட்டது. | டெக்டர் வண்டியை பழுதுபார்த்து கழிவுப் பொருள் சேகரிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சபைக்குரிய வாகனங்களை விரைவாக பழுதுபார்த்து பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டின் LDSP செயற்திட்டத்தில் இருந்து ரூபா 9,065,413 செலவில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட இயற்கை உணவகம் 2022 ஆம் ஆண்டின் போது சகல வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் கொங்குறீட் கூரையுடன் தரை மாடியும் உள்ளது. அதன் பின்னர் 2023 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்தின் மூலம் அந்த கட்டிடத்திற்கு ரூபா 425,433 செலவிடப்பட்டிருந்தது. கொங்கிறீட் கூரையின் மேல் ஒன்று சேர்க்கின்ற நீரை அகற்றுவதற்காக Sq.m 195.18 அளவு 20 mm தடிப்பத்தில் 1:3 கலவையில் மீண்டும் கொங்கிறீட் இடுவதற்கு ரூபா 334,636 சபை நிதியத்திலிருந்து செலவிடப் பட்டிருந்தது. | இயற்கை உணவகத்திற்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற கட்டிடத்தின் சரியான இருப்பிற்காக சபை நிதியத்திலிருந்து இனங்காணப்பட்ட அத்தியவசியப் பணிகளாக கருதி அந்த செலவினம் செய்யப்பட்டிருந்தது. | நிர்மாணங்கள் குறித்துரைத்த திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |